காலையில் நதிக்கரையிலோ, தேவாலயத்திலோ படிப்பவர்கள் சிவ ஸாயுஜ்யத்தைக் கிட்டப்பெறுவார்கள்" என்று கூறியவராய் மூன்றாம் அத்யாயத்தை நிறைவுறச் செய்தார்.

இத்துடன் மூன்றாம் அத்யாயம் நிறைவுற்றது.

நான்காம் அத்யாயம்

இந்த க்ஷேத்திரத்திற்குக் "கந்துகாபுரம்" எனப் பெயர் ஏற்பட்ட காரணத்தை மூன்றாம் அத்யாயத்தின் வாயிலாயுரைத்த ஸூதமுனிவரை சௌநகர், "முனிவரே! இந்தத் தலத்தின் பெயருக்குக் காரணமான கந்துகமும் (பந்தும்) மற்றும் தேவியடைந்த சாபமும் எப்படிப்பட்டவை? சாபம் பெற்ற தேவி அஞ்சவில்லையா? சாபத்திலிருந்து விடுதலை எங்கே நிகழ்ந்தது? என்பவை குறித்து விரிவாகக் கூறவேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்.

அதற்கு ஸூதமுனிவர், பார்வதீதேவியைப் பாணிக்ரஹணம் செய்து கொண்ட பின்னர் நாரத முனிவர் உள்பட அனைவரும் விடைபெற்றுச் சென்றனர். பின்பொருகால் பார்வதீதேவி தோழியர்களுடன்

முக்தாவித்ருமவைடூர்ய பத்மராகாதி மண்டிதம் ।
ஸகிபிஸ்ஸஹிதா தேவி தாடயாமாஸ கந்துகம் ।   (5-b, 6-a)

முத்து, பவழம், வைடூர்யம், பத்மராகம் ஆகிய மணிகளால் அலங்கரிக்கப்பெற்ற பந்தினை விளையாடிக்கொண்டிருந்தாள். அப்போழ்து சிவபெருமான், "தேவி! நலம் தரும் எனது நல்வார்த்தையைக் கேள்" என்றார். இவ்வாறு கூறிய கணவரின் சொற்கேளாது பந்து விளையாட்டில் மிகவும் ஈடுபாடு கொண்டு இருந்துவிட மறுபடியும் சிவபெருமான், பார்வதி! விளையாட்டில் கவனம் செலுத்தாதே, இதனைக் கேள்" என்று கூறினார். எத்தனை சொல்லியும் அவள் கேட்கவில்லை. விளையாட்டிலேயே தன்னை ஈடுபடுத்திக்கொண்டு, அந்த பந்தினை மீண்டும் அடித்து விளையாடுவதால்

பார்வத்யா: கரபத்மாப்யாம் வேகஸந்நாடிதேன ஹி
கந்துகோத்பதனேனைவ தேவலோகச்சிக்ஷுபே
பதனேனைவ பூமிஸ்ச சசால ஸகிரித்ருமா
டஹஸ்வாயும் ஸஸத்யாஸௌ தஸ்மின் அவஸரே சிவ:
ஸ்ரம்ஸே தேன தத்நீவிம் ஸூக்ஷ்மாந்நிர்முக்த பந்தனா
நீவிம் தாம் பாஹ்வைகேன க்ருஹீத்வா க்ரீடனா பரா
மஹாதேவ: பரம் க்ருத்த: கரே ஜக்ராஹ கந்துகம்
யதாபூர்வம் காலகூடம் தத்ததை வோதரே ஹர:
ஸ்த்தாபயாமாஸ நிர்யத்னம் ஸ்ருஷ்டி ஸ்த்தித்யந்தகாரக:
(13-b, 14-a, 15, 16, 17-b, 18)

சுவர்க்கம் பாதாளம் போன்ற உலகங்களும், அங்குள்ள மரம், செடி, கொடிகளும் அசைந்தாடின. அப்போது காற்று பலமாக வீசியது. காற்றின் வேகத்தால் பார்வதீ தேவியின் உடை நெகிழ ஓர் கையால் துகில் பற்றியவளாய் மறுபடியும் பந்து விளையாட்டில் ஈடுபட்டாள். இதனால் கோபமடைந்த சிவபெருமான் காலகூட விஷத்தினைக் கழுத்தில் நிறுத்தியது போல கந்துகத்தைப் பிடித்து வயிற்றோடு அணைத்துக் கொண்டார். கந்துகம் காணாது துயருற்ற பார்வதி, தோழியர்களுடன் அதனை வானம், பூமி, பத்து திசை, பாதாளம், சுவர்க்கம், பூலோகம், ஏழுகுல மலைகள், காடு, குகை போன்ற இடங்களில் தேடியும் கிடைக்காததால் இது பரமேசுவரனின் மாயை என்றெண்ணி சிவபெருமானைப் பிரார்த்தனை செய்தாள். அதற்குள் பந்து விளையாட்டால் ஏற்பட்ட நில நடுக்கத்தினை அறியாத தேவர்களும்

கம்பமானா ஸுரேந்த்ராஸ்தே கிமேதத்திதி சங்கித: ।
ஸர்வே விமானமாருஹ்ய ஆஜக்மு: ரஜதாசலம் ।
வனம் ஸௌகந்திகம் சாபி தத்ருகஸ்தத்ர தேவதா: ।
பஹுசாகாஸமாகீர்ணம் தன்மத்யே தத்ருசுர் வடம் ॥
தன்மூலே ரத்னஸம்யுக்தே ஹேமஸிம்மாஸனே ஸுரா: ।
தத்ருசு: சிவமீசானம் ச்வேதவர்ணம் ஸுலக்ஷணம் ।
க்ருத்வோரௌ தக்ஷிணே ஸவ்யம் பாதபத்மம் ச ஜானுநி ।
பாஹுப்ரகோஷ்டேऽக்ஷமாலாம் ஆஸீனம் தர்க்கமுத்ரயா ॥
கிரிசம் தம் ஸமாலோக்ய ஸஹஸா ஜாத கௌதுகா: ।
ஸலோகபாலமுனய: ப்ரணேமு: சிரஸா முதா ॥

(24-a, 30-a, 48, 49-b, 50-a, 53, 55)

வருணன் நிரம்ப ரத்தினங்களுடனும், யம தண்டத்துடன் சித்ரகுப்தன் மகிஷ (எருமை) வாகனனாகவும், நிர்ருதி முதலிய திசைப்பாலகர்கள் ஆயுதங் களோடும், யோகீந்த்ரர்கள், சசி, மேனகை, உருப்பசி போன்ற பெண்டிர்கள், பித்ருகணங்கள், மனிதர்கள், அரசர்கள் ஆகியோர் ஈசனைக் காண்பதற்காக கைலை நகரத்தை வந்தடைந்தனர். அந்நகரத்தின் நடுவில் நிரம்பக் கிளை களுடன் நெடுதூரம் விரிந்து பரந்ததும், மிக உயரமானதுமான ஆலமரம் ஒன்றைக் கண்டனர். அந்த மரத்தின் அடியில் பால் நிறத்துடன் சடாபாரம், திருநீறு, மான்தோல், சந்திரன் ஆகியவற்றைத் தரித்தவரும், தனது வலது தொடைமீது இடது திருவடியை வைத்தவராய், வலது மணிகட்டிலிருந்து கீழே தொங்குகின்ற அக்ஷமாலையோடும், தர்க்க முத்திரையுடன் திகழ்பவரும், திவ்யமாலைகளையும், பட்டாடைகளையும் அணிந்தவரும், நானா பூதகணங் களால் சூழப்பெற்றவருமான சிவபெருமானைக்கண்டு தேவர்கள், திசைப் பாலகர்கள், முனிவர்கள் போன்றோர் மகிழ்ச்சியுடன் அடிவீழ்ச்சி செய்து வணங்கினர்'' என்றுகூறி நான்காம் அத்யாயத்தினை நிறைவேற்றினார்.

இத்துடன் நான்காம் அத்யாயம் நிறைவுற்றது.

ஐந்தாம் அத்யாயம்

சிவபெருமானை வீழ்ந்து வணங்கிய தேவர்கள் எழுந்திருந்து அஞ்சலி செய்தவர்களாகச் சிவபெருமானிடம். "கருணைக்கடலே! அண்டியவர்களின் அல்லல் களைபவரே! அழிவற்றவரே! உலக நாயகரே! தேவர்களின் தலைவரே! பக்தர்களிடத்தில் தாய் நினைந்த கன்றுபோல் வாத்ஸல்ய குணத்தைக் காட்டுபவரே! சங்கரரே! எங்களைக் காப்பாற்றியருளுங்கள்

உன்றன் புதல்வர்களாகிய நாங்கள் தாங்களாலேயே மோஹமுட்டப் பெற்றவர்களாகத் துயரக்கடலுள் மூழ்கி உங்களை அறிகின்றிலோம். இருப்பினும் நீயேதான் எங்களுக்குக் கதி'' என்றும். ''உன்னை அண்டியவர்களைத் தாங்கள் கருணைக் கண்களால் குளிர நோக்கியருளவேண்டும்'' என்பது போன்ற தோத்திரங்களால் துதித்து மகிழ்ந்தனர்.

தேவர்களின் துதிகேட்டு மகிழ்ந்த சிவபெருமான், ''தேவர்களாகிய நீங்கள் எதற்காக இங்கே வந்துள்ளீர்கள் ? அஸுரர்களின் தொல்லை பொறுக்க முடியவில்லையா ? இங்கு வந்ததோடன்றி என்னை தோத்தரித்து மகிழ்வித்தீர்கள். இவ்வாறு செய்யக் காரணமென்ன ?'' என்று வினவினார். அதற்கு தேவர்கள், ''ஸர்வக்ஞரும், கருணைக் கடலுமான நீவிர் எங்களது வருகையின் காரணம் அறிந்திருப்பீர்கள். இருப்பினும், உலகங்கள் யாவும் திடீரென பிரளய காலத்தில் அசைவது போன்று அசையலுற்றன. அதன் காரணம் அறியாத நாங்கள், தங்களிடம் அதற்குரிய காரணத்தைக் கேட்டறிய வேண்டி இங்கு குழுமியுள்ளோம். ஏன் இவ்வாறு நிகழ்ந்தது ? என்பதைத் தாங்கள் கூறுவீர்களாக'' எனச் சிவபெருமானிடம் தெரிவித்தனர். அதைக் கேள்வியுற்ற சிவபெருமான் பார்வதியின் செய்கையை நினைத்து, புன்முறுவல் பூத்த முகத்துடன், ''தேவர்களே ! பார்வதி தேவியின் பந்து விளையாட்டே இந்த அசைவுக்குக் காரணம். ஆதலால் நீங்கள் அனைவரும் கவலையை விட்டு இருப்பிடம் செல்லலாம்'' என்று கூற, தேவர்கள் எல்லோரும் தத்தம் இருப்பிடம் சென்றனர்.

பார்வதியின் செய்கையால் சினமுற்ற சிவபெருமான் பார்வதியை நோக்கி, ''உனது பந்தாட்டத்தின் விளைவு உலகோரனைவரையும் அஞ்ச வைத்தது. அது சமயம் நான் எவ்வளவு சொல்லியும் நீ கேட்கவில்லை ஆதலால் நீ பசுவாகக் கடவாய்'' என்று சாபமிட்டார் சிவபெருமான். சாபத்தால் வருந்திய பார்வதி கணவரின் சினத்தைத் தணிப்பதற்காகவும், அவரிடமே சாபத்திலிருந்து விடுதலையைப் பெறுவதற்காகவும் சிவபெருமானைத் துதித்து, ''எனது தவறை மன்னித்து என்னுடைய பந்தினையும் காப்பிப்பாயாக'' என்று வேண்டினார். சிவபெருமான் அதற்குச் சிரித்துக்கொண்டே ''முதலில் நீ உபய காவிரியின் நடுவில் அமைந்துள்ள கண்வ முனிவரின் ஆச்ரமத்திற்குச் செல். அதற்கு அருகில் ஒரு பொய்கை சூரிய புஷ்கரிணீ என்ற பெயரோடு அழைக்கப்பெறும். அதனண்மையில் காணப்படுகின்ற சோபன விருக்ஷத்தின் கீழ் என்னைக் குறித்துத் தவம் மேற்கொண்டு, சிவலிங்கமூர்த்தியான என்னையும் அங்கே பூஜை செய். அப்போது நான் உனக்கு காட்சி தருவேன். என்னைத் தரிசிப்பதாலேயே நீ சாபத்திலிருந்து விடுபடுவாய். சாபவிமோசனம் ஆன பின்பு நான் உன்னைப் பாணிக்ரஹணம் செய்து கொள்வேன். பந்தையும் உன் மகிழ்ச்சிக்காக அளிப்பேன்'' என்று கூறினார்.

உடனே பார்வதிதேவியார் ஆனந்தப் பரவசத்துடன் தோழியர்களோடு கைலாசத்திலிருந்து புறப்பட்டாள். ஆங்காங்கே வழியில் அழகிய மலைகளையும், பற்பல இயற்கைக் காட்சிகளைக் கண்ணுற்ற பார்வதி, தன் தோழியர்களுக்கும் அவைகளைக் காண்பித்தவளாய் மெல்லக்கடந்து காவிரிக் கரையை அடைந்தாள். அங்கு அடர்ந்துயர்ந்த பற்பல மரம், செடி, கொடிகளால் அச்சம் தோற்றுவிப்பதோர் அரண்யம் புலப்பட்டது. அதைக் கண்டு அஞ்சிய பார்வதி, காக்கும் கடவுளான திருமாலைப் பிரார்த்தித்தாள். பார்வதியின் பிரார்த்தனைக்கிணங்கிய திருமால், நான்கு தோள்களாகச் சங்கம், சக்கரம், கதை, தாமரை, ஸ்ரீவத்ஸம் என்னும் மறு, மலர்ந்த தாமரை முகம், செந்தாமரைக்கண்கள் போன்றவைகளுடன் மஞ்சள்நிறப்பட்டு உடுத்தியவராய் கருடவாகனராகக் காட்சியளித்தார். திருமாலின் திவ்ய தரிசனத்தைக் கண்டுகளித்த பார்வதி, "நாராயணா, கருணைக்கடலே, அடியவரின் அல்லல் களைபவரே" என்பது போன்ற நாமாவளிகளைக் கொண்ட தோத்திரத்தால் போற்றிப் புகழ்ந்தாள்" என்றுகூறியவராய் ஐந்தாம் அத்தியாயத்தை நிறைவேற்றினார்.

இத்துடன் ஐந்தாம் அத்யாயம் நிறைவுற்றது.

ஆறாம் அத்யாயம்

பார்வதி தேவி திருமாலைத் தோத்திரம் செய்த முறையை விளக்கிய ஸூத முனிவர், இவ்வத்யாயத்தில் தேவியின் மகிமைகளை விளக்குகின்றார்.

"பார்வதிதேவி தான் தவம் மேற்கொள்ள வேண்டிய இடம் இதுவேயெனத் தீர்மானித்து, பெரிய அரண்யமாகக் காட்சி தரும் இவ்வனத்தில் தவம் புரியத் திருமாலை "நீதான் உறுதுணையாய் நிற்க வேண்டும்" என்று வேண்டினாள். அதற்கு ஸ்ரீதேவி, பூமிதேவி ஆகிய உபய நாச்சியாருடன் காட்சி நல்கிய திருமால், "பயப்படாதே பார்வதி! உனக்கு உறுதுணையாய் நான் இவ்வனத்திலேயே வஸிக்கிறேன்" என்று கூறியவராய் வடமேற்குத் (பந்தணை நல்லூரில் இரண்டாம் பிரகாரத்திற்கருகில் தென்மேற்குத்) திசையில் கோயில்கொண்டு உமையவளால் வணங்கப் பெற்றவராகவும், "ஆதிகேசவன்" என்னும் திருநாமத்துடனும், தன்னை வணங்குபவர்களுக்கு வீடுபேற்றை அளிப்பவராகவும், தேவியைக் காப்பவராகவும் அருள்பாலித்து வருகிறார். அவரது ஸந்நிதானத்திலிருந்து சற்றுத் தொலைவில் ஓர் ஆச்ரமம் இருப்பதையும், அந்த ஆச்ரமத்தில் கண்வ முனிவர் பல முனிவர்களுடன் கூடியிருப்பதையும், குமுதம் உத்பலம் போன்ற மலர்ச்செடிகளாலும், கிளிகள், வண்டுகள் போன்ற பறவைகளாலும், மூங்கில், புளி போன்ற மரங்களாலும், யானை, மான், புலி ஆகிய விலங்குகளாலும் கிளைக்குக் கிளை விரைவாய்த்

தாவுகின்ற குரங்குகளாலும் சூழ்ந்து விளங்கும் அழகிய ஒரு தடாகத்தினையும் கண்டாள். அனைவருக்கும் நலம் அருள்வதான அந்த தடாகத்திற்கருகில் ராஜவ்ருக்ஷம் (கொன்றை மரம்) ஒன்று தென்பட்டது. பார்வதிதேவி தான் தவம் புரிய வேண்டிய இடம் இதுவே என முடிவு செய்து தோழியர்களை அங்கிருந்து அனுப்பியவளாய்த் தவத்திற்குரிய வேடமணிந்து, கைலாசத்தை (வடதிசை) நோக்கியமர்ந்து சிவபெருமானே எனக்குக் கணவராக வேண்டும் என்கிற மனதுடன் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் தவம் புரிந்தாள்'' என்று கூறினார்.

பிறகு ஸூத முனிவர் ''சிவபெருமானின் சாபத்தால் பசு உருக் கொண்ட பார்வதி, ஈச்வரனை வணங்கிய முறையை (கோ வ்ருத்தாந்தத்தைத்) தற்போது கூறுகின்றேன் கேளுங்கள். அந்தப் பசு அனைத்து லக்ஷணங்கள் பொருந்தியதாகவும், இரு பக்கமும் அசைகின்ற சாஸ்னையோடும், நீண்ட வாலுடன் அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நால்வகைப் புருஷார்த்தங்களைச் சுரப்பினவாகப் பெற்றும், காமதேனுவை விஞ்சி நிற்பதாகவும் விளங்குகிறது. அதன் உடலில் இந்திரன் முதலான தேவர்கள் குடியிருப்பதோடு ஈரேழுலகையும் அடங்கியிருக்கின்றது. அந்தப் பசு தினமும் ஒரு யோஜனை தூரம் சென்று நாலா பக்கங்களிலும் புல்பூண்டுகளை மேய்ந்து, மாலையில் சூரிய புஷ்கரிணிக் கரைக்கு மேற்திசையில் நின்று இரவில் அற்புதமயமான பாலை அங்கே சுரக்கின்றது. அவ்வாறு சுரந்த பால் கெட்டியாகி லிங்கமாக வடிவெடுத்துவிட சிவபெருமானும் அதில் ஆவிர்பவித்துவிடுகிறார். மேலும் பல நாட்கள் அந்தப் பசு சிவலிங்கமூர்த்தியை பாலால் அபிஷேகம் செய்தும், மானஸிகமான உபசாரத்தைப் புரிந்தும் தவத்தினையும் மேற்கொண்டது. அப்படியே நாட்கள் செல்ல ஒருநாள் அந்தப் பசு தவம்புரியும் இடத்திலிருந்து ஒரு யோஜனை (9 மைல்) தொலைவிலுள்ள நாரதரின் ஆச்ரமத்தை அடைந்து, அங்கிருந்து அரை யோஜனை தூரத்திலமைந்த ஸித்தாச்ரமத்திற்குச் சென்றது. அதற்கருகிலுள்ள நிலங்களில் பயிர்கள் செழிப்பாக வளர்ந்திருந்தன. பயிர்களைக்கண்ட பசு மூன்று நாட்கள் தொடர்ச்சியாக அங்கே சென்று பயிர்களை மேய்ந்து விடுகிறது. நான்காம் நாளில் நிலத்தின் காப்பாளர் பயிர்களை எருதோ அல்லது பசுவோ மேய்ந்திருப்பதைக் கண்டு அன்றிரவு நிலத்திலேயே தங்கிவிட்டார். வழக்கம்போல் பயிர்களை மேய்வதற்காக பசுவும் அங்கே வர நிலக்காப்பாளர் இப்பசு யாருடையது? எங்கிருந்து வந்தது? என்று தனக்குள்ளேயே வினா எழுப்பியவராய் அதை விரட்டிப் பிடிக்க தடி ஒன்றை எடுத்துக்கொண்டு அதன் பின்னே ஓடினார்.

இதையறிந்த பசு, மிக விரைவாகப் புஷ்கரிணிக்கு மேற்திசையில் வந்து அங்கே அமைந்திருக்கின்றதான பயோலிங்கத்தின் (பாலினால் ஏற்பட்டலிங்கத்தின்) மீது காலை வைத்து ஓடி, அதனைப் பின் தொடர்பவரின் கண்ணிற்குப் புலப்படாமல் மறைந்து விடுகிறது. பசுவைப் பின் தொடர்ந்த நிலக்

காப்பாளர் குளம்படையாளம் பதிந்த சிவலிங்கத்தையும், அதைச் சுற்றிக் காணப்பெறும் குளம்படிகளையும் நோக்கி, வியப்பெய்தியவராய் இது மகேச்வரரின் மாயை என்றறிந்து அந்த சிவலிங்கத்தை முறைப்படி பூசித்து மகிழ்ந்தார். பிறகு ஈசனின் அருளால் தன்னூர் திரும்பினார். வழக்கம் போலவே மறுபடியும் அந்தப் பசு கேதாரம் எனும் விளை நிலத்திற்கு வருகை தந்தது. இறைவியே பசு வடிவெடுத்து அங்கே வந்ததால் அந்நிலத்தில் விளைச்சல் மேலும் பன்மடங்கு பெருகியது.

அதே பசு பிறிதோர் சமயம் வேறொருவரின் நிலத்தில் மேயக்கண்டு நிலத்திற்குச் சொந்தக்காரரான பத்ரகன் என்பவர், அதனை வீட்டில் கட்டச் செய்து, பாதுகாப்பின் பொருட்டு ஒரு பணியாளரையும் நியமித்தார். பத்ரகன் என்பவரின் வீட்டில் மூன்று நாட்கள் நிரம்பப் பால் கொடுத்து அவரை மகிழ்வித்தது. மகிழ்ச்சியால் திளைத்த பத்ரகன் நான்காம் நாள் அதனை விருப்பப்படி உலவிவர அனுமதித்தார். பத்ரகன் என்பவரிடமிருந்து விடுதலைபெற்ற பசு, சோபன மரத்தடியில் சென்று அங்கு காணப்பெறும் சிவலிங்கத்தைத் தனது பாலினால் நீராட்டி மகிழ்வித்து மாலையில் வீடு சேர்ந்த பசுவைப் பால் கறக்க முற்படும்போது பால் தரவில்லை. பசுக் காப்பாளன் பாலைக் கறந்து தானே பருகியிருக்கலாம் என்றெண்ணிய பத்ரகன் அவனை அடித்துக் கயிற்றினால் கட்டி "உண்மையைச் சொல், பசு ஏன் பால் கொடுக்கவில்லை? நீயே கறந்து பருகிவிட்டாயோ?" என்று கேட்டார். அதற்குக் காப்பாளன், "பாலை நான் பருகவுமில்லை, பசு பால் கொடாததன் காரணத்தையும் அறிகின்றிலேன். காரணம் அறிந்தபின் உரைக்கின்றேன்" என்றும் கூறினான். மறுநாள் பசுவின் காப்பாளன் அந்தப் பசுவை விருப்பம்போல் மேயவிட்டு மறைந்திருந்து அதன் செய்கையைக் கவனித்தான். பசு சோபன மரத்தடியில் சென்று பால் சுரந்தது. அதைக் கண்டு தனது யஜமானனிடம் நடந்த நிகழ்ச்சியை விவரித்தான். செய்தி அறிந்த பத்ரகனும், பசுக்காப்பாளருமாக விரைவாய்ச் சோபன மரத்திற்கு அருகில் சென்று பார்வையிட அங்கே சிவலிங்க மூர்த்தியினைக் கண்டு திடுக்கிட்டார்கள். பிறகு அங்கெழுந்தருளியுள்ள சிவலிங்கமூர்த்தியை பில்வ பத்திரத்தால் அர்ச்சித்து ஸித்தி பெற்றனர். அத்தகைய பெருமைவாய்ந்த அந்தப் பசு எங்கும் உலவி வருவது கண்டு அங்குள்ளோர் வணங்கிப் பேறு பெற்றனர்" என்று தேவியின் மஹிமைகளைக் கூறியவராய் ஆறாம் அத்யாயத்தை நிறைவு செய்தார்.

இத்துடன் ஆறாம் அத்யாயம் நிறைவுற்றது.

ஏழாம் அத்யாயம்

தேவியின் மஹிமைகளை விவரித்த சூதமுனிவர், "சிவபெருமான் பார்வதீ தவம் புரிவதை கைலாசத்தில் இருந்தவாறே அறிந்து, தமது பரிவாரங்களையும் பின்புறம் இருந்து பணிவிடை புரியும் சண்டிகேசரையும் சாமரம் வீசும் விநாயகரையும், ஆலவட்டம் போடும் முருகப்பெருமானையும் அங்கேயே விட்டுவிட்டு தானொருவராகி காளை வாகனத்தில் ரஜதாசலத்தி (கைலையி)லிருந்து புறப்பட்டார். அப்போது ஏற்பட்ட ஒளியைக்கொண்டே பார்வதீ தன் கணவரின் வருகையை ஊஹித்தறிந்தார். அடுத்த சில நொடிப் பொழுதில் சிவபெருமானையே நேரிலும் காணலுற்றார். அதனால் சாப விமோசனமும் கிடைக்கிறது.

பின்னர் பார்வதீ தேவி இந்த அமுதமயமான லிங்கத்தினுள்ளே தாங்கள் எழுந்தருளி அருள் புரிய வேண்டும்" என்று பலமுறை வேண்டினாள். பார்வதியின் வேண்டுகோளுக்கிணங்க சிவபெருமானும் அந்த அம்ருத மயமான பயோலிங்கத்தில் ஆவிர்பவித்தார். அதைக்கண்ட தேவர்கள் பூமாரி பொழிய அது உலகிற்கே ஒரு திருவிழாவாகக் காட்சி நல்கியது. தேவர்களும் அங்கே குழுமியவர்களாய், பசுபூசித்த காரணத்தால் அந்த சிவபெருமானை பசுபதீசுவரர் என்றழைத்தவர். மேலும் அந்த பசுபதீசுவரரைத் தேவர்கள் எட்டுப் பாடல்களால் தோத்திரம் செய்தனர். "இந்த சிவாஷ்டகத்தை சிரத்தையுடன் பாராயணம் செய்பவர் பாபங்களனைத்திலிருந்தும் விடுபட்டு நினைத்தவையெல்லாம் கிட்டப்பெறுவர்" என்று பலச்ருதியையும் கூறி அனைவரும் சுவர்க்கம் சென்றனர்.

பரமேச்வரரைக் கண்ட மகிச்சியோடு பார்வதீ. "தேவதேவா! ஜகந்நாதா! உனக்கு என் வணக்கம். நானும் நின்னருளாங்கதியன்றி மற்றொன்றில்லேன். கருணாநிதியான நீ என்னைக் காப்பாற்று. உன்னைத் தரிசித்ததால் எனது சாபம் நீங்கியது. என்னுடைய பந்தினைத் திரும்ப அளித்து என்னையும் மணந்துகொள்" என்று வேண்டினாள். பார்வதியின் விருப்பப்படியே சிவபெருமான் தன்னுடைய வயிற்றிலிருந்த பந்தினைப் பசுவின் குளம்பால் ஏற்பட்ட கீற்றின் வழியாகத் தேவியிடம் அளித்தார். பார்வதியும்மகிழ்ச்சியோடு பந்தினைப் பெற்று சிவபெருமான் முன்னிலையில் மீண்டும் பந்து விளையாடி முன்னர் நடந்த நிகழ்ச்சிகளை அங்குள்ளோருக்கு நினைவில் கொண்டுவர எண்ணினாள். அப்போழ்து பிரம்மாதி தேவர்கள், சசிதேவி போன்ற தேவலோகப் பெண்டிர்கள் சிவபெருமானை பத்ராஸனத்தில் (மங்களகரமான இருக்கையில்) அமர்த்தி, நல்ல முகூர்த்தத்தில் துந்துபி, படஹம், ம்ருதங்கம் போன்ற வாத்தியங்கள் முழங்க, கந்தர்வர் பாட, அப்ஸரஸ்த்ரீகள் ஆட பார்வதியைப் பரமேச்வரனுக்குத் திருமணம் செய்து

வைத்தனர். திருமணம் நடந்த இடத்தில் மண்டபமொன்றையும், விமானத்தையும் விச்வகர்மாவைக்கொண்டு நிறுவச் செய்தனர். அப்படியே பொன்மயமான திருச்சுற்றுகளையும், நான்கு கோபுரவாயில்கள்* கொண்ட தேவாலயத்தையும் அங்கே எழுப்பி, சிவபெருமானைப் பூஜித்து விடைபெற்றவர்களாய் அனைவரும் தத்தம் இருப்பிடம் சென்று சேர்ந்தனர்.

பார்வதியை மணந்த சிவபெருமான், "என்னுடைய இடது பக்கத்தில் வந்தமர்ந்துகொள்' என்று புன்னகையுடன் கூற, அதற்குப் பார்வதி, "நான் உன்றன் வரவு பார்த்தே தவத்திற்காக கயிலையின் திசைநோக்கி அமர்ந்தேன். இப்போது சோபன வ்ருக்ஷத்திற்கருகில் அவ்வாறே அமர்ந்திருக்கிறேன்" என்று கூறிய காரணத்தால் கந்துகாபுர (பந்தணைநல்லூர்) க்ஷேத்திரத்தில் உமையம்மையாருக்கு வடைதிசை நோக்கியவாறு சந்நிதி அமைக்கப் பெற்றுள்ளது பின்னர் பார்வதியும் பரமசிவனும் பந்து விளையாடி மகிழ்ந்தனர். இருவரும் அங்கேயே தங்கி பல யுகங்கள் அருள் பாலித்து வந்தனர் யுகங்கள் பல கடந்தபடியால் தேவாலயமும் சிதிலமடைந்தது. சிவபெருமானைத் தரிசிப்பதற்காகப் பின்னர் அங்கு வந்த ஓர் அரசன், சிதிலமடைந்த தேவாலயத்தை முன்பிருந்தது போலவே சீர்செய்து புதுப்பித்தான்" என்று கூறியவராய் ஏழாம் அத்யாயத்தை நிறைவேற்றினார்.

இத்துடன் ஏழாம் அத்யாயம் நிறைவுற்றது

எட்டாம் அத்யாயம்

சிவபெருமான் பூலோகத்திற்கு வந்ததையும் திருமணம் செய்து கொண்டதையும் விவரித்த சூத முனிவரை, சௌனகர்

"கந்துகாபுர க்ஷேத்திரத்தின் தேவாலயத்தைப் புதுப்பித்தது யார்? எந்த பகுதியைச் சார்ந்தவர்? இதனை எவ்வாறு புதுப்பித்தார்? என்பதைக் குறித்துத் தாங்கள் கூறவேண்டும்" என்று வேண்டினார்.

அதற்குச் சூத முனிவர் — சூரிய வம்சத்தில் தோன்றியவனும், அரசர்க்குரிய லக்ஷணங்களுடனும், பிரம்ம ஞானியாக, அறநெறியாளனாக, ஆயுத வித்யையில் திறம் மிக்கவனாக, ரகு என்னும் பெயருடன் திகழ்கின்ற ஓர் அரசன், தன் குருவுடன் தீர்த்த யாத்திரை மேற்கொண்டான். அவனுக்கு முக்கியமான நோக்கம் காவிரியில் நீராடவேண்டும் என்பது. அதற்காக அவன் தன் தேசத்தை விட்டுத் தென்திசை நோக்கிப் புறப்பட்டுக் கண்வ முனிவரின் ஆச்ரமத்தை அடைந்தான். கண்வ முனிவர் புலன் மற்றும்

---

* தற்போது காணமுடியவில்லை.

கோபத்தை வென்றவர். ஸாங்க (ஸாங்கம் என்றால் அங்கங்களுடன் கூடியது என்பது பொருள். அங்கம் என்ற சொல் வேதத்தின் அங்கங்களான சிக்ஷை, வியாகரணம், சந்தஸ், நிருத்தம், ஜோதிஷம், கல்பம் ஆகியவற்றைக் குறிக்கிறது) வேதாத்யயனம் (அத்யயனம் — ஓதுதல்) செய்து, சாஸ்த்திரங்களனைத்திலும் வல்லமை பெற்றவர். மேலும் தவசிரேஷ்டரான கண்வ முனிவர் ஆச்ரமத்திற்கு வந்த அரசனை வரவேற்று விருந்தினருக்குரிய உபசாரத்தைச் செய்தார்.

அரசனும் முனிவரை வணங்கி அவரளித்த விருந்தினையும் ஏற்று அன்றிரவு அங்கேயே தங்கிப் பின் உறங்கச் சென்றான். அரசன் உறங்கும் தருவாயில் கனா ஒன்றையும் கண்டான். காலையில் விழித்தெழுந்த அரசன் தான் கண்ட கனாவினை, "முனிவரே! நேற்று நான் கண்ணயர்ந்துறங்கும் போது சிவபெருமான் எனது கனவில் தோன்றி, 'அரசே! காலத்தால் என்னுடைய ஆலயம் சிதிலமடைந்துள்ளது. அதனைச் சீர் செய்து புதுமையாக்கு. அதனால் உனக்கு தீர்த்த யாத்திரை செய்த பயன் கிட்டும்' எனச் சிவபெருமான் மொழிந்தார்" என்ற செய்தியினைக் கண்வ முனிவரிடம் தெரிவித்தார். முனிவரும் அரசன் தெரிவித்த செய்திகளைக் கேட்டு, அவனுக்கு சூரிய புஷ்கரிணியின் பெருமை, திருத்தல வரலாறு சோபன வ்ருக்ஷத்தின் மஹிமை ஆகியவற்றை விரித்துரைத்தார்.

முனிவர் அருளிய விரிவுரையைச் செவிமடுத்த அரசன், முதலில் ஆச்ரமத்தைச் சுத்தம் செய்து பிறகு அழகிய வேலைப்பாடுகள் மிகுந்த விமானமொன்றை அமைத்தான். அந்த விமானத்திற்கு முன் பகுதியில் ஓர் அழகிய மண்டபத்தினையும், அதற்குக் கிழக்கில் பதினாறுகால் மண்டபத்தையும், அந்த மண்டபத்திற்கும் கிழக்கில் ஆயிரங்கால் மண்டபத்தையும், சிவபெருமானின் ஸந்நிதானத்தைச் சுற்றி மூன்று திருச்சுற்றுகளையும்[1], நாற்றிசைகளிலும் படிகட்டுகள், சுவர்ண கலசங்கள் ஆகியவற்றுடன் கோபுரங்களையும், விசித்ரமான மூர்த்திகளையும் ஸிம்ஹ தோரணங்களையும் பெற்ற மஹாமண்டபத்தினையும், காளைமாடுகள் பொருந்திய பெரிய மதில் சுவர்களையும் கொண்டதாக அந்த திருக்கோயிலை அமைத்து, அதற்கு கதவுகள். தோரணங்கள் எதிரிகள் எளிதில் உட்புகாவண்ணம் அகழி[2], தோட்டம் மாடிவீடுகள், ஸபாபவனங்கள் அழகிய சாலைகள், கடைகள் ஆகியவைகளைப் பெற்ற நகரையும் ஏற்படுத்தினான்.

மேலும் அத்தலத்தில் அருள்பாலித்துவரும் சிவபெருமானுக்கு ரத்தினத்தூண்களையுடையதும், பல்வேறு மூர்த்திகளால் அலங்கரிக்கப் பெற்றதும், வைரம், வைடூர்யம் போன்ற கற்களால் இழைக்கப்பெற்றதும்,

---

1 & 2 மூன்று திருச்சுற்றுகளையும், அகழியையும் இன்றுமங்கே நாம் காணலாம்.

பொன் தகட்டால் வேயப்பெற்ற கூரையையுடையதும், தோரணம், கொடி ஆகியவற்றால் சிறந்து விளங்குவதும், திவ்ய வஸ்த்ரங்களால் சுற்றப்பட்டதும், ஒலியெழுப்பக்கூடிய மணிகளைக் கொண்டதும், பொற்குடையோடும், பழங்கள், கிழங்குகள் ஆகியவற்றுடனும், தென்னை, கமுகு முதலான மரங்கள், மல்லிகை, செண்பகம், மகிழம், புன்னை ஆகிய மலர்கள், முத்து மாலைகள், திவ்ய சக்கரங்கள் போன்றவற்றுடன் மற்றும் பல வைபவங்களோடும் திகழ்கின்ற தேரொன்றையும் அமைத்துக்கொடுத்தான்.

மேலும் அந்த அரசன், மாசி மாதத்தில் கொடியேற்றப்பெற்று, மாசி மகத்தில் தீர்த்த ஸ்நானம் அமையுமாறு பிரம்மோற்சவத்தை வேததந்த்ரோக்த வழியில் செய்வித்து* தேரோட்டத்தையும் கண்டு மகிழ்ந்து, தீர்த்தஸ்நானத் தன்று நீராடித் தனது விருப்பமெல்லாம் ஈடேறப் பெற்றவனாய்க் கந்துகேசருக்குச் சில பொருட்களை அன்புடன் செலுத்தித் தன் நகரை அடைந்தான். "அவ்வாறு அங்கு நடைபெறும் பிரம்மோத்ஸவத்தினைக் கண்டுகளித்து, தீர்த்த ஸ்நான தினத்தில் நீராடி சிவபெருமானைப் பூசிப்பவர், ஸர்வவ்யாபியான ஸர்வேச்வரனின் அருளால் விருப்பங்கள் யாவும் விரைவில் ஈடேறப்பெறுவர்" என்று கூறியவராய் எட்டாம் அத்யாயத்தை நிறைவுறச் செய்தார்.

இத்துடன் எட்டாம் அத்யாயம் நிறைவுற்றது.

ஒன்பதாம் அத்யாயம்

கந்துகாபுர க்ஷேத்திரத்தின் சிதிலமடைந்த தேவாலயத்தைப் புதுப்பித்தவனும், கந்துகேசருக்குத் தேர் அமைத்துக் கொடுத்தவனுமாகிய சூரிய குலத்து அரசனைப் பற்றி விளம்பிய சூத முனிவரை சௌநகர், "பார்வதி எதற்காக சோபன மரத்தடியில் வாசம் செய்தார்? அந்த மரம் முன்பு எப்படி இருந்தது? அதனை ராஜ வ்ருக்ஷம் என்றழைக்கக் காரணம் என்ன? என்றவாறெல்லாம் அறிய விரும்புகின்ற எங்களுக்கு அதன் பெருமைகளை விரிவாகத் தாங்கள் கூறவேண்டும்" என்று கேட்டுக்கொண்டனர்.

அதற்கு ஸூத முனிவர், நந்தனவனத்தில் கல்பக வ்ருக்ஷம் என்றழைக்கப் பெற்ற அம்மரம், பார்வதி தேவியின் சேவைக்காக (கைங்கர்யத்திற்காக) நூற்றுக்கணக்கான ஆண்டுகள் தவமிருந்தது. தவத்தால் பிரஸன்னமான மலைமகளிடம், "தாயே! சுவர்க்கலோகத்தில் எனக்குள்ள பெருமை

* 1995 ஆம் ஆண்டு (பவ வருட) பஞ்சாங்கப்படி தை ரத சப்தமியில் கொடி ஏற்றி, மாசி மகத்தன்று தீர்த்தவாரி நடந்திருப்பது தெரியவருகிறது.

பூலோகத்திலும் கிடைக்க வேண்டும். உன்னுடைய பூஜையின் பொருட்டே என்னிடம் மலர்கள் தோன்றுதல் வேண்டும். என்னுடைய நிழலால் காலமெல்லாம் தாங்களுக்குப் பணிவிடை புரியவேண்டும்'' என்று அந்த கற்பக மரம் வேண்டியது. அதைக் கேட்ட மலைமகள், "அப்படியே ஆகட்டும்'' என்று வரம் அளித்தாள். ஆதலால் அந்த வ்ருக்ஷம் சூரிய புஷ்கரிணிக்கருகில் தோன்றி பார்வதியின் பணிவிடை குறித்து ராஜ வ்ருக்ஷம் என்றழைக்கப் பட்டது. இதனைப் பூசிப்பவர் மேலை விண்ணோரும் கூறவொண்ணாத வகையில் புண்ணியப் பயனைப் பெறுவர். மேலும் சூரிய புஷ்கரிணியில் நீராடி பசுபதீச்வரரை வணங்கி இந்த மரத்தின் அடியில் ஜபம் செய்கின்றவர் விரைவில் ஜப ஸித்தியை அடைவர். இந்த மரத்தினை வலம் வந்து வணங்குபவர், இதனடியில் வேள்வி முதலியவற்றை மேற்கொள்பவர் அவர்களது வீட்டில் சுப நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெறும்.

மேலுலகத்தில் கற்பக விருக்ஷம் என்று அழைக்கப் பெற்ற அந்த மரமே தற்போது பூவுலகில் சோபன வ்ருக்ஷம் என்ற பெயரோடு வேண்டிய அனைத்தையும் மக்களுக்கீந்து மகிழ்விக்கின்றது.

இந்த க்ஷேத்திரத்தில் புண்ணிய தீர்த்தங்கள் பல உள்ளன. இங்கு தென் வட திசைகளில் காவிரி ஆறு பாய்கின்றது. இத்தலத்தின் கிழக்கே சூரிய புஷ்கரிணியும், மேற்கே வாலி பிரஹ்ம தீர்த்தங்களும், வடமேற்கில் சந்த்ர தீர்த்தமும், வடகிழக்கில் தேவ தீர்த்தமும் ஆகிய புண்ணிய தீர்த்தங்கள் உள்ளன'' என்று கூறினார் சூத முனிவர்.

அதைக் கேட்ட ரிஷிகள், "வாலி தீர்த்தப் பெருமையினையும், இங்கு வாலி எப்போது வந்தார்? எவ்வாறு அந்த தீர்த்தத்தை நிறுவினார்? என்பதையும் தாங்கள் விரிவாக எங்களுக்கு எடுத்துரைக்கவேண்டும்'' என்று சூத முனிவரை வேண்டினர்.

அதற்கு ஸூத முனிவர், "திரேதையில், வலிமையும் தைரியமும் கொண்டவரும், மூவுலகுமறிந்தவரும், எதிரிகளை வென்றவரும், புகழ்பெற்றவரும், சாந்தமனம் படைத்தவரும், சிவ பூஜையில் நாட்டமுள்ளவரும், இந்திரனின் புதல்வருமான வாலி கிஷ்கிந்தையை ஆண்டு வந்தார். வானர அரசரான அந்த வாலி ஒரு சமயம் துங்கபத்திரை என்னும் நதியை அடைந்து, சூரியோதயத்தில் நீராடி அங்கு விருபாக்ஷரை வணங்கி, தானங்கள் பல மேற்கொண்டு அங்கிருந்து கிளம்பி மேரு மலையை அடைந்து, அதன் எண்டிசையிலுமுள்ள சிவலிங்கமூர்த்திகளையும், அங்கிருந்து கைலாசம் சென்று சிவபெருமானையும் வணங்கித் தன் நகரம் திரும்பினார். பின்பொரு சமயம் தென்திசையில் சிறப்புற்றுத் திகழும் கமலாலய தீர்த்தத்திற்குச் சென்று கொண்டிருக்கும்போது இடையில் அமுதத்திற்கொப்பான சிவலிங்கத்தைக் கண்டார். ஆதலால் மகிழ்ச்சி பொங்க அதனைப் பம்பா தீரத்திற்கு எடுத்துச்

சென்று அங்கே வைத்து ஒரு கோயிலை எழுப்பவேண்டும் என்றெண்ணினார். அந்த சிவலிங்கத்தைப் பெயர்த்தெடுக்க அசைத்துப் பார்த்தார். சிறிதும் அவரால் அசைக்கமுடியவில்லை. அதனைச் சுற்றியுள்ள மண்ணைத் தன்னுடைய கூரிய நகங்களால் பறித்து அகற்றினார். பிறகு தன்னுடைய வாலினால் அந்த சிவலிங்கத்தைச் சுற்றி மேலெழுப்ப முயற்சித்தார். அப்போழ்தும் அசைக்க இயலவில்லை. மறுபடியும் தன் வாலை சிவலிங்கத்தின் மீது சுற்றி, தலைகீழாக நின்றுகொண்டு கைகளால் பூமியை அழுத்தி மேலே எழுப்ப முற்பட்டு அசைத்துப் பார்க்க, அப்போது த்வீபங்களேழும், மலைகளும் அசைந்தாடின. அதற்குள் கோபாவேசங்கொண்ட சிவபெருமான் சிம்ம கர்ஜனையுடன் வாலியின் முன்னே தோன்றி, அவரைப் பிடித்து மேற்குத் திசையில் வீசியெறிந்தார். வாலி பூமியில் வீழ்ந்தபோது அவரது கைவிரல் பகுதிகளும், பாத தலங்களும் நீர்மட்டத்தினைத் தொட்டு சிறிய நீர்த் தேக்கங்கள் அங்கே உருவாகின.

அதனால் அச்சமுற்ற வாலி தன்னுடைய நலத்தை முன்னிட்டு சூரிய புஷ்கரிணிக் கரையில் அருள் பாலித்து வரும் சுந்துகேசனைத் தோத்திரம் செய்து தவத்தையும் மேற்கொண்டார். தவப்பயனாய் சிவபெருமானிடம், "என்னால் ஏற்பட்ட இந்த தீர்த்தம் என் பெயராலேயே வழங்குதல் வேண்டும்" எனக் கேட்டுக் கொண்டார். சிவபெருமானும் அதற்கு இசைவு தெரிவிக்க வாலியும் அவரை வலம் வந்து வணங்கிப் பின் கமலாலயம் சென்றார்" என்று கூறினார்.

பிறகு சௌனகர், "சூரிய புஷ்கரிணிக் கரையில் பசுபதீசுவரர் எதற்காக வாஸம் செய்கிறார்? என்பதைத் தாங்கள் கூற வேண்டும்" என்று ஸூத முனிவரை வேண்டினார். வேண்டுகோளையேற்ற ஸூத முனிவர், "முன்பு தக்கன் வேள்வியில் ஏற்பட்ட தோஷம் நீங்குவதற்காக சூரியன், கண்வ முனிவரின் ஆச்ரமத்தையடைந்து, வருத்தத்துடன் சிவபெருமானைக் குறித்துத் தவம் செய்ய நினைத்தார். தவம் செய்வதற்காக ஆச்ரமத்திற்கு அருகிலமைந்த குளத்தில் முப்போதும் நீராடிக் கடுந்தவம் புரிந்தார். தவத்தினை மெச்சிய சிவபெருமான் காளை வாகனராகக் காட்சி கொடுத்தார்" என்று கூறியவராய் ஒன்பதாம் அத்யாயத்தை நிறைவேற்றுகிறார்

இத்துடன் ஒன்பதாம் அத்யாயம் நிறைவுற்றது.

பத்தாம் அத்யாயம்

சோபன வ்ருக்ஷத்தின் பெருமை, வாலி தீர்த்தம் ஏற்பட்ட வரலாறு, சூரியனின் தவம், சிவபெருமான் சூரியனுக்குக் காட்சி கொடுத்தல் ஆகியவற்றை கூறியவாறே இவ்வத்யாயத்தைத் தொடங்குகின்ற ஸூத முனிவர், "சூரியன் தனது தவத்தால் கிடைத்த காட்சியைக் கண்டு சிவபெருமானை தோத்திரம் செய்தார். அவ்வாறு தோத்திரம் செய்யும்போது சூரிய பகவான், "எனக்கு நலமருளி நான் நீராடிய அந்த பொய்கைக்கு சூரிய புஷ்கரிணீ என்றே பெயர் சூட்டி, அதனருகிலேயே கோயில் கொண்டிருக்கவேண்டும். சூரிய புஷ்கரிணியில் நீராடி தங்களை வணங்குகிற பக்தர்களுக்கு நான் பெற்றது போலவே போக மோக்ஷத்தைக் கொடுக்கவேண்டும். என்னையும் காத்தருளவேண்டும் அதற்காக நான் தங்களை மறுபடியும் மறுபடியும் வணங்குகின்றேன்" என்று சிவபெருமானிடம் பிரார்த்தித்தார். சூரியனின் பிரார்த்தனையைக் கேட்ட சிவபெருமான், "நீ கிரகங்களுக்குள் முதலிடம் வகித்து ஆதித்யன் என்று அழைக்கப்படுவாயாக. மேலும் உன்னால் நீராடப்பெற்ற பொய்கை ஸௌர்ய புஷ்கரிணீ என்னும் பெயருடன் பெருமை பெற்றுத் திகழும். இதில் குளித்தவர்களுக்கு சிவலோகப் பிராப்தியும், அதன் பிறகு ஸாயுஜ்யமும் கிட்டும். சூரிய தேவா! உன்னுடைய வேண்டுகோளின்படி சூரிய புஷ்கரிணிக் கரையில் அமைந்துள்ள சோபன மரத்தடியில் நான் உமையவளுடன் கூடியவளாய் எப்போதும் வஸிக்கின்றேன்" என்றவாறு சூரியனுக்கு வரங்களை அருளி அவரது விருப்பங்களையெல்லாம் "அப்படியே ஆகட்டும்" என்று பதிலளித்து பூதகணங்களுடன் மறைந்துவிட்டார்.

சூரிய பகவானும் அத்தலத்தில் வெகுநாட்கள் கந்துகேசரைப் பூசித்து, பாசுபதம், அசுவமேதம் ஆகிய வேள்விகளையும் புரிந்து, தேவர்களின் கட்டளையை ஏற்று புரந்தர (இந்திர) புரத்திற்குச் சென்றார். அத்தலத்தில் தவம் புரிந்த மனு முதலானோர்கள் மற்றும் மனுபுத்திரர்கள் ஆகியோர் வேள்வி முதலானவற்றை மேற்கொண்டு மோக்ஷமடைந்தனர். இவ்வளவு பெருமை பொருந்திய இந்த க்ஷேத்திரத்தின் இதிஹாஸத்தைக் கேட்பவர் யாவரும் நற்கதி பெறுவார்கள் என்பதில் ஐயமில்லை. முன்பொரு சமயம் காம்போஜ தேசத்தவனும் இக்ஷ்வாகு வம்சத்தில் தோன்றியவனுமான ஹேமகேது என்ற அரசன், அம்ருதமயமான இந்த சிவலிங்கமூர்த்தியைக் கண்டு வழிபட்டு, தானங்கள் பல செய்து சிவலோக பதவி அடைந்தான்.

மேலும் இந்த க்ஷேத்திரத்திற்கு கீழ்த்தரமான செயல்களைப் புரிபவனும், நோயால் பீடிக்கப்பட்டவனுமான ஒருவன் தன்னுடைய பூர்வ ஜன்ம புண்ணியத்தின் பயனாக வந்து சேர்ந்தான். அவன் இங்குள்ள சூரிய புஷ்கரிணியில் நீராடி, சிவபெருமானையும் தொழுது, நோயிலிருந்து குண

மடைந்து அவரது தியானத்திலேயே மூழ்கி உயிர் துறந்துவிட்டான். அதோடின்றி அவன் திவ்ய விமானமேறி சிவலோகத்தையும் அடைந்தான். ஆதலால் கந்துகேசரை வணங்குகின்றவருக்கு நிச்சயம் சிவலோகப் பதவி கிடைக்கும். கலியுகத்தில் ஸித்தியைத் தரவல்லது இந்த கந்துகாபுர க்ஷேத்திரம்' என்று கூறியவராய் பத்தாம் அத்யாயத்தை நிறைவு செய்தார்.

இத்துடன் பத்தாம் அத்யாயம் நிறைவுற்றது.

பதினொன்று, பன்னிரண்டாம் அத்யாயங்கள் *

சூரிய பகவன் சிவபெருமானைத் தோத்திரம் செய்து வரம் பெறுதல், சூரியன் நீராடிய பொய்கை சூரிய புஷ்கரிணீ என்றழைக்கப் பெறுதல், சூரிய புஷ்கரிணிக் கருகில் உமையவளுடன் கூடியவராய் சிவபெருமான் கோயில் கொண்டு அருள்பாலித்தல் போன்ற செய்திகளைக் கூறிய ஸூத முனிவர்,

"முன்பொரு ஸமயம் காஷ்மீர தேசத்தவனும், நிஷாத மன்னனும், தருமநெறி பிறழ்ந்து நடப்பவனுமான ஓர் அரசன், செல்வத்திற்காக ஊர்விட்டு ஊர் செல்லுங்கால் சூரிய புஷ்கரிணியில் நீராடி சிவபெருமானைத் தொழுதான். இரவு நேரமாகி மழையும் பெய்த காரணத்தினால் அவனால் இந்த க்ஷேத்திரத்திலேயே தங்க நேரிட்டது. இரவு தங்கிய காரணத்தால் அவனது பாபங்கள் கழிந்தன. உயர்கதியையும் அவன் பெற்றான். ஆதலால் இந்த க்ஷேத்திரத்தில் ஓரிரவு தங்குபவர்களுக்கும் ஈசனின் அருளால் மோக்ஷம் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை" என்று கூறினார்.

பிறகு சௌனகர்,

கந்துகாபுரநாதனான சிவபெருமானை எவ்வாறு, எப்பொருட்கள் கொண்டு, எந்த காலத்தில் பூசிக்கவேண்டும்? கந்துகேசரை பூசித்துப் பேறு பெற்றவர் எவரேனும் உளரோ! என்பது போன்ற செய்திகளைத் தாங்கள் தயவுசெய்து எங்களுக்குக் கூறியருளவேண்டும்" என்று வேண்டினார்.

---

* இந்நூலகத்தில் காணப்பெறும் இரண்டு சுவடிகளிலும் பதினோராம் அத்யாயம் தனித்துக் கூறப்படவில்லை.

அதைக்கேட்ட ஸூதமுனிவர், கந்துகேசரைப் பூசிப்பது கலியுகத்தில் மிகச்சிறந்த ஒன்று. அதற்காகக் காலையில் எழுந்து நீராடி சுத்தமாக அலர்ந்த புஷ்பங்கள், ரஸமான பழங்கள் ஆகியவை எடுத்துக்கொண்டு தேவாலயம் சென்று பசுபதீச்வரரை வணங்கவேண்டும். அங்கு சிவபெருமான் முன்னிலையில் பூர்ணகும்பம் வைத்து, பினாகபாணியான சிவபெருமானைக் குடத்தில் ஆவாஹனம் செய்து, ஸ்ரீருத்ரஸூக்தப் பாராயணம் செய்தவாறே கும்ப நீரால் நீராட்டுவிக்கவேண்டும்.

பிறகு தன் இதயத்துள்ளே எழுந்தருளியிருக்கும் மூர்த்தியோடு கந்துகேசரை ஐக்யமாக எண்ணுதல் வேண்டும். பின்னர் சந்தனம், புஷ்பம், தூபம், தீபம், வஸ்த்ரம், அணிகலன்கள் முதலியவற்றால் சிவபெருமானை உபசரித்து உமையுடன் கூடிய பசுபதீச்வரரை பில்வ பத்ரத்தால் அர்ச்சனை செய்யவேண்டும். அர்ச்சனை முடிந்த பின் அன்னம், பால், தயிர், தேங்காய், பஞ்சபக்ஷ்யங்கள் போன்ற நிவேதனத்தைச் சிவபெருமானுக்கு அமுதுசெய்விக்க வேண்டும். பின்னர் சிவஸஹஸ்ரநாம ஸ்தோத்ரத்தையோ, அஷ்டோத்தரசத நாம ஸ்தோத்ரத்தையோ பாராயணம் செய்து, வலம் வந்து, வணங்கி அபராதக்ஷமாபணத்தை வேண்டி, பூசையினையும் முடித்து ஸாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்யவேண்டும். இவ்வாறு பூஜை செய்பவர் அனைத்து ஸித்திகளையும் அடைவர். இதனால் சிவபெருமான் பிரஸன்னமடைந்து நினைத்த அனைத்தையும் கொடுத்தருள்வார்.

"இந்த ருத்ரோபாக்யானம் இம்மைச் சுகத்தையும், மறுமைப் பயனையும் அளிக்க வல்லது. இதனைக் காலையில் படிக்கக் கேட்பவர் கல்வி, செல்வம், மக்கள் ஆகியவற்றுள் விரும்புவதைப் பெறுவர். இந்த உபாக்யானம் மிகவும் ரகசியமானது. இதனை விருப்பமற்றவர்களிடமோ, ஆடம்பரமாய் உள்ளவர்களிடமோ கூறுதல் கூடாது. சாந்த மனம் பெற்றவர், அறவழியில் செல்ல நாட்டமுடையவர், உடல், உள்ளம், செல்வம் போன்ற அனைத்தாலும் பிறர் நலம் பேணுபவர் ஆகியோர்களிடத்தில் இந்த ரகசியத்தைக் கூறலாம்." என்று கூறிய சூத முனிவர், "இன்னும் கேட்க வேண்டியது உளதோ ?" என்று முனிவர்களிடம் வினவ, அவர்களும் மௌனமாய் இருந்தது கண்டு கந்துகாபுரத் (பந்தணைநல்லூர்) திருத்தலத்தின் பெருமைகளை முழுதும் விவரித்தவராய் பன்னிரண்டாம் அத்யாயத்தை நிறைவேற்றினார்.

இத்துடன் பதினொன்று, பன்னிரண்டாம் அத்யாயங்களும்

கந்துகாபுர மாஹாத்ம்யமும் நிறைவுற்றது.

॥ சுபம் ॥

துணை நூற்பட்டியல்

A. कन्दुकापुरमाहात्म्यम् — Paper Mss. B. 1843/D. 10331
Sarasvati Mahal Library, Thanjavur.

B. Agitagama Vol. II — Editor, N. R. Bhatt, Institute of
Francais D' Indologie Pondicherry, 1967.

C. Rauravagama ,, ,,

D. தஞ்சை மராட்டிய மன்னர் கால அரசியலும், சமுதாய வாழ்க்கையும் —
ஆசிரியர், கே. எம். வேங்கடராமையா, எம். ஏ.,
தமிழ்ப்பல்கலைக்கழகம், 1984.

E. அகரமுதலி — தொகுப்பாசிரியர், மு. சண்முகம் பிள்ளை,
தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1985.

F. கும்பகோணம் மகாமகத் திருவிழா — முனைவர், இராசு. பவுன் துரை,
தமிழ்ப் பல்கலைக் கழகம், 1991.

G. கல்வெட்டும், கோயிற்கலையும் — பி. லிட். பாடப்புத்தகம்,
சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை.

H. சிவஸ்தலமஞ்சரி — த. சுப்ரமணியப் பிள்ளை, ஜூன், 1931.

I. திருத்தலங்கள் வரலாறு — பதிப்பாசிரியர், சு. பாலசாரநாதன்,
டாக்டர் உ. வே. சாமிநாதய்யர், நூல்நிலையம், சென்னை. 1990.

J. திருக்கோயில் திருவண்ணாமலைத் தலசிறப்பு — அறநிலையத்துறை
வெளியீடு, சென்னை. டிசம்பர் - 1998.

K. Raghunatha Nayakabhyadayamu — Vijayaraghava Nayaka.
Sarasvati Mahal Library, Thanjavur. 1951.

L. Vaishnava Iconography — By Danial Smith &
K. K. A. Venkatachari, Pancharatra Prachara
Parishad, Madras. 1969.

M. கல்வெட்டில் ஊர்ப்பெயர்கள் — ஆசிரியர், ஆ. ஆளவந்தார்,
உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை. 1983.

N. South Indian Inscriptions Vol. XIII No. 212 — ——

O. கணக்கதிகாரம் — பதிப்பாசிரியர், திருமதி சத்யபாமா காமேச்வரன்,
சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர். 1998.

(SARASVATI MAHAL LIBRARY PRESS, THANJAVUR)